S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE சனி டிசம்பர் 20 * 2025 * மலர் -1 * இதழ்-202* VOL-1 * ISSUE-202 விலை ரூ.3 * பக்கம் -4



நெல்லை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கவிருக்கும் அதிதீவிர சிகிச்சை பிரிவு கட்டிடம் தயார் நிலையில் உள்ளது.



ஊட்டியில் மைனஸ் 0° டிகிரி உறைப்பனி காணப்பட்டது. தலைக்குந்தர் பகுதியில் ஏற்கனவேபச்சைபசேலாகஇருந்தபுல்மைதானம்கடும்பணியால்வெள்ளைபோர்வையை போர்த்தியது போல் காட்சியளிக்கிறது.



பொங்கல் பண்டிகைக்கு இன்னும் சில வாரங்களே உள்ள நிலையில் மதுரை அலங்காநல்லூர் அருகே அய்யூர், ஏர்ரம்பட்டி ஆகிய பகுதிகளில் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள மஞ்சள் கிழங்கு செடிகளை படத்தில் காணலாம்.

## அனுமன் ஜெயந்தியை முன்னிட்டு

# நாமக்கல் ஆஞ்சநேயருக்கு 1 லட்சத்து 8 வடைமாலை!

நாமக்கல்,டிச.20–

அனுமன் ஜெயந்தியொட்டி இன்று நாமக்கல் ஆஞ்சநேயருக்கு 1 லட்சத்து 8 வடைமாலை சாத்தப்பட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்.

நாமக்கல்நகரில்மையப் பகுதியில் ஒரே கல்லினால் செதுக்கப்பட்ட 18 அடி உயர ஆஞ்ச நேயர் இரு கைகளையும் குப்பியவாறு சாந்த சொரூபியாக பக்தர்களுக்கு அருள் பாளித்து வருகிறார்

ஆண்டு தோறும் மார்கழி மாதம் அமாவாசை மூல நட்சத்திரத்தில் வரும் ஆஞ்சநேயர் பிறந்த நாள் அனுமன் ஜெயந்தி விழாவாக வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி நடப்பு ஆண்டில் ஆஞ்சநேயர் ஜெயந்தி தினமான இன்று அதிகாலை 4.40 மணிக்கு ஆஞ்ச நேயருக்கு 1 லட்சத்து 8 வடை மாலை சாத்தப் பட்டு சிறப்பு பூஜை செய்யப்பட்டது.

ஆயிரக்கணக்கில் திரடண்டிருந்த பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று ஆஞ்சநேயரை தரிசனம் செய்தனர்.



இதனைத் தொடர்ந்து பால், வெண்ணெய், சந்தனம் ,சீயக்காய், திருமஞ்சனம் போன்ற வாசனை திரவியங்கள் கொண்டு ஆஞ்சநேயருக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து ஆஞ்சநேயர் தங்க காப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

நாமக்கல் ஆஞ்சநேயரை தரிசனம் செய்ய வெளி மாநிலம் மற்றும் மாவட்டத்தில் இருந்து ஏராளமான பக்தர்கள் வந்திருந்து ஆஞ்சநேயரை வழிபட்டனர். கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த 500–க்கும் மேற்பட்ட போலீசார் சுழற்சி முறையில் பாதுகாப்பு பணியில் ஈடுப்படுத்தப்பட்டிருந்தனர்.

20 சிசி.டிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டது. அனுமன்ஜெயந்தியையொட்டி நாமக்கல் நகரில் நேற்று ஒரு நாள் மட்டும் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டு உள்ளது.

**அனுமன் ஜெயந்தியை முன்னிட்டு நாமக்கல் கோவிலில் உள்ள 18 அடி உயர ஆஞ்சநேயருக்கு 1 லட்சத்து 8 வடைமாலை சாத்தப்பட்டு தீபாராதனை மற்றும் பல்வேறு அபிஷேங்களுடன்சிறப்பு பூஜை நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.**




### கல்லூரி மாணவர்களுக்கு

# ஜனவரி 5-ம் தேதி முதல் இலவச மடிக்கணினி!

## முதல் கட்டமாக 10 லட்சம் பேருக்கு வழங்கப்படுகிறது!!

சென்னை, டிச.20–

தமிழ்நாட்டில் முதல்கட்டமாக 10 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு ஜனவரி 5–ஆம் தேதி முதல் இலவச மடிக்கணினி வழங்கப்பட உள்ளது.

தமிழ்நாட்டில் பள்ளி, கல்லூரி மாணவ–மாணவிகளுக்கு அரசு சார்பில் ஏராளமான சலுகைகளும், உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக மிதிவண்டி வழங்கப்படுகிறது.

அதே நேரத்தில் கல்லூரி மாணவ – மாணவிகளுக்கு இலவசமாக மடிக்கணினி வழங்கும் திட்டம் ஏற்கனவே தொடங்கப்பட்டது. இடையில் சில வருடங்கள் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் கல்லூரி மாணவ–மாணவிகளுக்கு 20 லட்சம் மடிக்கணினிகள் வழங்கப்படும் என சட்டசபையில் அறிவிக்கப்பட்டது.

இதற்காக ரூ.2 ஆயிரம் கோடியும் பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

அதன்படி இந்த மடிக்கணினிகளை வாங்க டெண்டர் விடப்பட்டது.



டிசம்பர் 19–ஆம் தேதி இந்த திட்டம் தொடங்கப்படும் என முதலில் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் மடிக்கணினிகளை தயாரித்து வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது.

இதையடுத்து ஜனவரி 5–ஆம் தேதி இதன் தொடக்க விழா நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ராதாபுரம் தொகுதியில் போட்டியிட விருப்ப மனு வழங்கிய முன்னாள் எம்.பி

நெல்லை,டிச.20

நெல்லை மாவட்டம் ராதாபுரம் சட்டமன்ற போட்டியிட தொகுதியில் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினரும், நெல்லை அதிமுக புறநகர் மாவட்ட பொருளாளருமான சௌந்தரராஜன் அதிமுக தலைமை அலுவலகத்தில் விருப்ப மனு வழங்கினார். அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் மக்களாட்சி மலர்ந்திட வேண்டும் என்பதற்காக, சென்னை ராயப்பேட்டை அதிமுக தலைமை அலுவலகத்தில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்தஅதிமுகநிர்வாகிகள்



விருப்ப மனு வழங்கி வருகின்றனர். ராதாபுரம் சட்டப்பேரவைத் தொகுதியில்போட்டியிடவிருப்பம் தெரிவித்து நெல்லை புறநகர் மாவட்ட அதிமுக பொருளாளரும் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமான சௌந்தர்ராஜன் அதிமுக தலைமை அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர்கள் OS. மணியன், தளவாய் சுந்தரம், வைகை செல்வன் ஆகியோரிடம் விருப்ப மனுவை சமர்ப்பித்தார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் வி.எம் ராஜலட்சுமி, அதிமுக அமைப்புச் செயலாளர் ஏ.கே.சீனிவாசன், மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் S.மைக்கேல் ராயப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மேலும் இந்த நிகழ்வில் ராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் அந்தோணி அமலராஜா, ராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், வள்ளியூர் தெற்கு ஒன்றிய செயலாளர் பால்துரை வள்ளியூர்வடக்கு ஒன்றிய செயலாளர் லாசர் திசையன்விளை பேரூர் செயலாளர் ஜெயக்குமார் பணகுடி பேரூர்செயலாளர்லாரன்ஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்



## புதுக்கோட்டை அருகே ஆலங்குடியில் மின் சிக்கன வார விழா விழிப்புணர்வு ஊர்வலம்!

புதுக்கோட்டை டிச.20

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி மின்சார வாரியம் சார்பில் அரசு அறிவிப் பின்படி மின்சிக்கனம், மின்விபத்து, மின் திருட்டு மற்றும் மின்சாரம் சம்மந்தமான நிகழ் வுகளை பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு ஏற் படுத்தஆலங்குடி மின்சார வாரியம் சார் பில் மின்சார மின் சிக்கன வார விழா மற் றும் விழி ப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.

ஊர்வலத்திற்கு ஆலங்குடி செயற்பொ றியாளர் நடரா ஜன் கொடியசைத்து ஊர் வலத்தை தொடங்கி வைத்தா ர். ஆலங் குடி உதவி செயபொறியாளர் லூர்து சகாயரா ஜ் தலைமை தாங்கினார். ஆலங் குடி உதவி மின் பொ றியாளர் மகாதேவ ராஜா மற்றும் மின்வாரிய உதவி மி ன் அலுவலர்கள் முன்னிலையில் ஊர்வலம் நடைபெற் றது

ஊர்வலம் ஆலங்குடி பஸ்ஸ்டாண்டில் இருந்து தொ ங்கி பழைய நீதிமன்ற வளாகம், அரசமரம் பஸ் ஸ்டாப், வட காடு முக்கம் கலைஞர் சாலை வழியாக சந்தைப் பேட்டை சென்றது பின்னர் அங் கிருந்து பஜார்கடைத்தெரு வழியாக மீண் டும் மின்வாரிய அலுவலகம் வந்து அடைந்தது. மின் சிக்கன வார விழாவை யொட்டி வழி நெடுகிலும் க டைகளுக்கு துண்டு பிரசுரங்களை மின்வாரிய ஊழியர் கள் வழங்கினார்கள். மேலும் மின் சிக்க னம் குறித்து ஒலிபெருக்கி மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தி மின் சிக்கனம் கடைபிடிக்கப்பட்டது.

## ஆலங்குடி தாலுகாவில் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத் தேர்தல் வேட்பு மனு தாக்கல்!



புதுக்கோட்டை, டிச.20

புதுக்கோட்டைஆர்.டி.ஓ. ஐஸ்வர்யா தலைமையில் நட ந்தது.தாசில்தார் வில் லியம் மோசஸ், சமூக பாதுகாப்பு தனி வட்டாட்சியர் விஜயலெட்சுமி, மண்டல துணை வட் டாட்சியர் சிவாஜிராஜன்,மாவட்ட விஏஓ சங்கத் தலைவ ர் உலகநாதன் மற்றும் வருவாய்த் துறையினர் முன்னி லையில் மனுக்கள் பெறப்பட்டன. நீரினை பயன்படுத்து வோர்சங்கதேர்தல்கடந்த 2022ம் ஆண்டு நடைபெற்றது அதில் காலியாக உள்ள தெற்கு வெள் ளாறு மற்றும் அம்புலி ஆறு ஆகிய 2 பொதுப்ப ணித்துறையின் கீழ்,, கூடலூர் தலைவர், கொத்தமங்கலம் கண் மாய், இசுக்க ண்மாய் மற்றும் ஓடக்கு ளம், பிரம்மாக்குளம், வடுவாக்கு ளம், சுன்னக்குடிகுளம், அம்மன்குளம் மற்றும் இராஜா கோபால சமுத்திரம், பெரியாத் தாள் ஊரணி மற்றும் வையாபுரிகுளம், நகரம் பெரிய ஏரி, கோபால சமுத்திரம் மற்றும் அய்யன்குளம், கரலையாக்குளம் வீரமணிக்கு ளம் பிடாரிக்குளம் மற்றும் காடியாக்குளம், குளமங்கலம் பெரிய ஏரி மற்றும் இலுப்பை குளம், பனங்குளம் மற்று ம் பாப்பான்குளம், மலையாண் டான்குளம் சின்ன பெரி ய கொடிக்குளம் மற்றும் மேக்காக்குளம், குளத்துக்குள ம். ஆகிய15 குளங்களுக்கு தலைவர் மற்றும் உறுப்பி னர் தேர்தல் தற்போது தேர்தல் நடைபெற உள்ளது. அதற்கான இடங்கள் தலைவர் பதவிக்கு 1 இடமும், உ றுப்பி னர் பத விக்கு 38 இடங்களும் மொத்தம் 39 இடங் கள் உள்ளன. இதில் நேற் று தலைவருக்கான மனு 1ம் உறுப்பினர்க ளுக்கான மனு 14 என மொத்தம் 15 மனுக் கள் பெறப்பட்டு உள்ளது. இதையடுத்து இன்று 19ம் தேதி மனுக்கள் பரிசீலனை க்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது மேலும் இன்றே மனு திரும்பபெறுவதும் பெற் றுக்கொள்ளலாம் மேலும் வரு கின்ற.27 ம் தேதி ( அதாவது சனிக்கிழமை) அன்று வாக் குப்பதிவு நடைபெற்று அன்றைய தினமே வெற்றி வேட் பாளர்கள் தேர்தல் நட த்தும் அலுவலரால் அறிவிக்கப் பட உள்ளது.



## இந்தியக் கம்யூ. கட்சியின் திருவரங்குளம் ஒன்றியம் சார்பில் கிளை கூட்டம்!

புதுக்கோட்,டிச.20

புதுக்கோட்டை அருகே இந்திய.கம் யூனிஸ்ட் கட்சியின் திருவரங்குளம் ஒன் றியம் சார்பில் கிளை கூட்டம் மாங் காட் டில் நடைபெற்றது.

கிளை கூட்டத்திற்கு ஆறுமுகம் தலை மையில் நடைபெற்றது..மாங்காடு நல் லதம்பி இல்லத்தில் நடை பெற்றது. கூட்டத்தில் மாவட்ட நிர்வாக குழு செல் வராசு ஒன்றிய குழு முடிவுகள் பற்றி ஒன் றிய செயலாளர் தமி ழ்மாறன் பேசினார் கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் வீர பாண்டியன் பங்கேற்று சிறப்புரை நிகழ்ந்த உள்ளார் .

நமது கிளையில் இருந்து குறைந்தது 20 பங்கேற்பது எனவும். 21ம் தேதி அன்று கைகாட்டி, அணவயல், மாங் காடு, வடகாடு பகுதிகளில் கிளை சார் பில் இந்தியக் கம் யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு சிறப்பு நிதி வாளி வசூ ல் இயக்கம் நடத்துவது எனவும்,

2025 டிசம்பர் மாதம் 26ம் நாள் இந்தி யக் கம்யூனிஸ்ட் கட் சியின் நூற்றாண்டு நிறைவு நாளையொட்டி கிளைகள் தோறும் செங்கொடி ஏற்றுவது எனவும் முடிவு செய்யப்ப ட்டது.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட் டன. மாங்காடு ஏடி காலனிக்கு செல்லக்கூடி

ய சாலை யை செப்பனிட வேண்டும், ஏடி காலனியில் அமைந்து ஃள்ளமேல் நிலை நீர் தேக்க தொட்டியை அகற்றி விட்டு 10ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்க தொட்டியை புதி தாக கட்டி அப்பகுதியில் வாழக்கூடிய நூறு குடும்பங்களுக்கு தண்ணீர் சப்ளை செய்ய வே ண்டும் எனவும்

மாங்காடு முழுவதும் உள்ள சாலை களை செப்பணிட வேண்டும் எனவும், வடகாடு மேற்கு பகுதியில் அமைந் துள்ள அரசு மருத்துவமனைக்கு செல் லக்கூடிய நோயா ளிகளுக்கு ஏதுவாக பஸ் நிறுத்தம் போர்க்கால அடிப்ப டையில் அமைக்க வேண்டும் எனவும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

## நாட்டு நலப்பணி திட்ட முகாம்!

கிருஷ்ணகிரி, டிச.20

பர்கூர் அருகே மிட்டப்பள்ளி கிரா மத்தில் பர்கூர் அரசு பாலிடெக் னிக் கல்லூரி சார்பில் நாட்டு நலப்ப ணித் திட்ட முகாம் நடந்து வருகிறது.

இதன் ஒரு பகுதியாக நுகர்வோர் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.கல்லூரி முதல்வர் முருகன் தலைமை தாங்கினார்.

இதில் சமூக நுகர்வோர் நல பாது காப்பு நலச்சங்க மாநில பொதுச் செயலாளர் சந்திரமோகன் கலந்து கொண்டு நுகர்வோர் பாதுகாப்பு குறித்து சிறப்புரையாற்றினார்.

முன்னதாக கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு நுகர்வோர் விழிப்புணர்வு குறித்த துண்டு பிரசுரங்களும் வழங்கி விதிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. முகாமில் நுகர்வோர் சங்க துணைத் தலைவர் ஜெய்சன், அரசினர் பல்தொழில்நுட்பக் கல் லூரியின் திட்ட அலுவர்க ளானசந்தோஷ், பிரான்சில் சேவியர் உள்பட பலர்கலந் துக் கொண்ட னர்.

## பிரிட்டானியா மில்க் பிக்கிஸ்: 'ஸ்பெஷல் எடிஷன் சூப்பர் ஸ்டார் பிஸ்கட்' வெளியீடு!

திருச்சி டிச.20

அடேங்கப்பா கதைகள் 2.0 முன்முயற்சியின் வெற்றியுடன், பிரிட்டானியா மில்க் பிக்கிஸ் அதன் பேக்குகளில் புதிய ஸ்பெஷல் எடிஷன் சூப்பர் ஸ்டார் பிஸ்கட்டை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த புதிய பிஸ்கட், தமிழ்நாட்டுடன் பிரிட்டானியாவின்நீண்டகாலபிணைப்பைமேலும் ஆழப்படுத்துவதோடு, தமிழின் பெருமை மற்றும் கதைசொல்லும் கலாச்சாரத்தை கொண்டாடுகிறது.

நுகர்வோர் QR குறியீட்டை ஸ்கேன் செய்து சிறப்பு கதைகளை அறிந்து கொள்ளலாம்;

பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் இதன் மூலம் பரிசுகள் மற்றும் ஹாங்காங்கிற்கு பயணவாய்ப்பை யும் பெறலாம். பிரிட்டானியா நிறுவனத்தின் மார்க் கெட்டிங் பிரிவின் பொது மேலாளர் சித்தார்த் குப்தா கூறுகையில்:

"பிரிட்டானியா மில்க் பிக்கிஸ் எப்போதும் தமி ழக குடும்பங்களின் இதயங்களில் சிறப்பிடம் பெற் றுள்ளது. இந்த ஸ்பெஷல் எடிஷன் பிஸ்கட் மூலம் மக்கள் மகிழ்ச்சியுடனும் கற்பனைமிக்க கதைகளு டன் இணைந்த அனுபவத்தை அனுபவிப்பார்கள். தமிழ்நாட்டுடன் நாங்கள் கொண்ட அழகிய பந் தத்தை இது மேலும் வலுப்படுத்துகிறது," என்று அவர் தெரிவித்தார்.

## உடல் பருமன், நீரிழிவு நோய்க்கான சிகிச்சைக்கு சிப்லா நிறுவனம் யுர்பீக்® (டிர்செபடைடு) மருந்தை அறிமுகப்படுத்தியுள்ளது!

சேலம் டிச.20

சிப்லா லிமிடெட் (BSE: 500087; NSE: சிப்லா) , உடல்பருமன் மற்றும் வகை 2 நீரிழிவு நோயை (T2DM) நிர்வகிப்பதற்கான வாராந்திர ஊசி சிகிச்சையான யுர்பீக்® (டிர்செபடைடு)ஐ இந்தியாவில் அறிமுகப்படுத்தியுள்ளது. லில்லி நிறுவனத்துடன்கூட்டு ஒப்பந்தத்தின்மூலம், DCGI ஒப்புதல் பெற்ற பிறகு, சிப்லாவுக்கு இந்தியாவில் இதனை விநியோகிப்பதும் விளம்பரப்படுத்துவதும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. சிப்லாவின்உலகளாவியதலைமைச் செயல்பாட்டு அதிகாரி அச்சின் குப்தா இந்த அறிமுகம், நாள்பட்ட நோய்கள் மற்றும் பெரும் சுமையைக் கொண்ட நோய்களுக்கு எதிரான போராட்டத்தில் மாற்றத்தக்க தருணமாகும் என்று தெரிவித்துள்ளார். யுர்பீக்® என்பது முதல் மற்றும் ஒரே இரட்டை தூண்டிய குளுக்கோஸ்சார்ந்த இன்சுலினோட்ரோபிக் பெப்டைடு (GIP) மற்றும் குளுக்கோன்போன்ற பெப்டைடு1 (GLP1) ஏற்பி ஆகும். இது உணவுக் கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சியுடன் சேர்ந்து வகை 2 நீரிழிவு நோய்க்கும், உடல் பருமன் அல்லது அதிக எடை கொண்ட பெரியவர்களுக்கு நாள்பட்ட எடை மேலாண்மைக்கும் பயன்படுத்தப்படுகிறது. மருந்து க்விக்பென்® கருவியில் 2.5, 5, 7.5, 10, 12.5 மற்றும் 15 மி.கி வலிமைகளில் கிடைக்கிறது, இது துல்லியமான மற்றும் வசதியான மருந்தளவை வழங்குகிறது. சிப்லா, யுர்பீக்® அறிமுகத்துடன், நாட்டின் பெரும் பகுதிகள் மற்றும் பெருநகரங்களுக்கு அப்பாற்பட்ட பகுதிகளுக்கு மருந்து கிடைக்கும் அணுகலை உறுதிசெய்வதில் முக்கிய முன்னுரிமை கொடுக்கிறது. மேலும், நோயாளி கல்வி மற்றும் ஆதரவு திட்டங்களை உருவாக்கி, மருந்து அளவு, சுயநிர்வாகம் மற்றும் பாதுகாப்பான பயன்பாட்டில் வழிகாட்டுதல்கள் வழங்குகிறது.

## உறுதியான மற்றும் தண்ணீர்படும் உட்புறங்களுக்காக க்ரீன்பேனல் அறிமுகப்படுத்தும் ட்யூரோபாயில்™!

சென்னை டிச.20



க்ரீன்பேனல் இண்டஸ்ட் ரீஸ் லிமிடெட் நிறுவனம் இந்தியாவில் மிகப்பெரிய மரப்பலகை உற்பத்தியாள ராக, புதிய ட்யூரோபாயில்™ ஹை டென்சிடி ஃபைபர்போர்ட் (HDF) பலகையை அறிமு கப்படுத்தியுள்ளது. இது அதிக ஈரப்பதம், வெப்பம் மற்றும் கடினமான பயன்பாடு களுக்கு வடிவமைக்கப்பட்ட olup, நீண்டகால செயல்திறன் மற்றும் வலிமையை உறுதி செய்யும் வகையில் உருவாக் கப்பட்டுள்ளது. 1100 கி/மீ³ அடர்த்தியுடன், ட்யூரோபாயில்™ மிக வலிமையான, கடினமான மற்றும் தண்ணீர்புகாத தன்மையுடையது, 12மிமீ மற்றும் 18மிமீ தடிமன்களில் கிடைக்கிறது மற்றும் 25 வருட உத்தரவாதத் துடன் வருகிறது.

ட்யூரோபாயில்™ குளியலறைகள், மாட்யூலர் சமையல றைகள், உயர் தர அறைக்கலன்கள், கதவு ஸ்கின்கள், சுவர் பேனலிங் மற்றும் அதிக நடமாட்டம் உள்ள வணிக இடங் களுக்கு ஏற்றது. இதன் உயர்ந்த அடர்த்தி, வெப்பம், ஈரப்பத மாற்றங்கள் மற்றும் நீராவி எதிர்ப்பு தன்மை நீண்டகால செயல்திறனை உறுதி செய்கிறது. மேலும், குறைந்த உமிழ்வு, ஆரோக்கியமான உட்புற சூழல், மற்றும் லாமி னேட், வெனீர், பியூ ஃபினிஷ் மற்றும் டிஜிட்டல் பிரிண்டிங் போன்ற மேற்பரப்புகளில் சிறந்த செயல்திறன் வழங்குகி றது. க்ரீன்பேனல் எம்டி மற்றும் சிஇஓ ஷோபன் மித்தல் கூறியது போல், ட்யூரோபாயில்™ என்பது நிறுவனம் மேம் பட்ட உற்பத்தி திறன் மற்றும் பொருள் அறிவியலில் தொடர்ச்சியான முதலீட்டை பிரதிபலிக்கும் தயாரிப்பு. ஜெர்மன் டிஃபென்பாசர் சிபிஎஸ்+ தொடர்ச்சியான பிரஸ் தொழில்நுட்பத்துடன் உற்பத்தி செய்யப்பட்ட ட்யூரோபா யில்™ ஒவ்வொரு பலகையும் ஒரே மாதிரியான செயல்தி றன், சிறந்த ஃபினிஷ் மற்றும் நீண்டகால நீடித்த தன்மையை உறுதி செய்கிறது.



உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கோவை மாநகர மாவட்ட திமுக பொறியாளர் அணி சார்பாக கோவை மகளிர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற வினாடி வினா போட்டி , விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் திமுக இலக்கிய அணி மீனா ஜெயக்குமார், மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், பொறியாளர் அணி மாநில துணை செயலாளர் எஸ்.ஏ.நந்தகுமார், கல்லூரியின் முதல்வர் அனுஸ்மிதா செபஸ்டின், மாநகர் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் பாபு, ஆகியோர் உடன் இருந்தனர்.

## வாணியம்பாடி அருகே மதுபோதையில் வெல்டிங் கடை தொழிலாளியை வெட்டி கொலை செய்த 4 பேர் கைது!



வாணியம்பாடி, டிச.20

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம் பாடி அடுத்த துருஞ்சிகுப்பம் கிராமத்தை சேர்ந்தவர் சுரேஷ் (38). இவர் வெல்டிங் கடையில் தொழிலாளியாக பணியாற்றி வந்துள்ளார். இவருக்கு திருமணம் ஆகி இரண்டு குழந்தைகள் உள்ளன.

இந்த நிலையில் கடந்த 15ம் தேதி மாலை துருஞ்சிகுப்பம் கிராமத்தில் வீட் டில் இருந்த சுரேஷை அவரது நண்பர்கள் போன் செய்து அழைத்துள்ளனர். இவர் கள் வழக்கமாக ஓர் இடத்தில் அமர்ந்து மது அருந்துவது வழக்கம்.

நண்பர்களின் செல்போன் வந்ததை தொடர்ந்து அவர் மது அருந்துவதற்காக துருஞ்சிகுப்பம் கிராமத்தில் இருந்து வெள்ளகுட்டை செல்லும் சாலையில் நண்பர்கள் அழைத்த இடத்திற்கு சென் றுள்ளார்.

அங்கே மது போதையில் இருந்த அவ ரது நண்பர்கள் சுரேஷ் உடன் வாக்குவா தத்தில் ஈடுபட்டுள்ளனர், பின்னர் வாக்கு வாதம் முற்றியதில் நண்பர்கள் 4 பேரும் சுரேஷை தாக்கியுள்ளனர்.

பின்னர் சுரேஷ் அங்கிருந்து தப்பியோ டிய நிலையில், பின்தொடர்ந்து சென்ற நண்பர்கள் அவரை வழிமறித்து கத்தி யால் கழுத்தை அறுத்து கொலை செய்து விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ள னர்.

அவ்வழியாக சென்ற பொதுமக்கள் ரத்த வெள்ளத்தில் உள்ள சுரேஷை கண்டு அதிர்ச்சி அடைந்து உடனடியாக ஆலங் காயம் போலீசாருக்கு தகவல் தெரிவித் துள்ளனர்.

தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற ஆலங்காயம் போலீசார் சடலமாக கிடந்த சுரேஷின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சம்பவ இடத்திற்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சியமளா தேவி நேரில் சென்று விசாரணை மேற்கொண்டார். மேலும் மோப்பநாய் வரவழைக்கப் பட்டு போலிசார் விசாரணை நடத்தினர்.

சம்பவம் குறித்து ஆலங்காயம் போலீ சார் வழக்கு பதிவு செய்து மேற்கொண்ட விசாரணையில் அதே பகுதியை சேர்ந்த சரத் ( 24), தர்மதுரை (32), தென்பாண்டி யன்( 35), சுரேஷ் ( 39) ஆகிய நான்கு பேரை கைது போலீசார் விசாரணை மேற்கொண்டதில் குடி போதையில் ஏற் பட்ட தகராறில் அடித்துக் கொலை செய் யப்பட்டதாக வாக்குமூலம் அளித்துள் ளனர்.

## புதுக்கோட்டை அருகே கார் கவிழ்ந்து பக்தர்கள் 4 பேர் படுகாயம்!



புதுக்கோட்டை,டிச.20

தஞ்சாவூர்மாவட்டம்பட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்த பாலசுப்ரமணியன் மகன் கார்த்திக் ( 35) இவர் கா ர் டிரைவர். தங்கம் மகன் சதீஷ் ( 29 ) செல்வராஜ் ம கன் பாலசுப்பிரமணியன் ( 30 ) மற்றும் அருப்புக் கோட்டையை சேர்ந்த வேல்மு ருகன் மகன் கார்த்தியசெ ல்வன் ( 25 ) இவர்கள் அனைவரும் ஒரே காரில் சதுரகி ரிக்கு சாமி தரிசனம் செய்ய சென்றதாக கூறப்ப டுகிறது. இதையடுத்து சாமி தரிச னம் முடித்து விட்டு காரில் சதுர கிரியில் இருந்து பட்டுக்கோட்டை சென்று கொண் டிருந் தனர். அப்போது புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அ ருகே உள்ள கீர மங்கலம் பட்டுக்கோட்டை சாலையில் அ ம்புலி ஆற்று பாலம் உள்ளது. இதைய டுத்து அதிகாலை அம்புலி ஆற்று பால த்தின் அருகே வந்தபோது ஓட்டுநர் கட் டுப்பாட்டை இழந் து சாலையோரம் உள்ள வேம்பு மரத்தில் மோதி தூக்கி வீசப் பட்டு கார் கவிழ்ந்தது. இந்த விபத்தில் லேசான கா யங்களுடன் சாமி பக்தர்கள் 4 பேர் லேசான காயத்துட ன் உயிர்த்தபினர்.

இந்நிலையில் அதிகாலை நடந்த விபத்து என்ப தால் அக்கம் பக்கத்தினர் அலறல் சத்தம் கேட்டு பார்த்த போது காருக்குள் சாமி பக்தர்கள் 4 பேர் சிக்கிக் கொண் டது தெரிய வந்தது.

இதையடுத்து அப்பகுதியினர்ட 4 பக்தர் களையும் காரில் இருந்து மீட்டு 108 ஆம் புலன்ஸ் மூலமாக பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த விபத்தில் லேசான காயங்களுடன் உயிர் தப்பி பரப ரப்பை ஏற்படுத்திய நிலையில் இது குறித்து கீரமங்கலம் போலீஸ் இன்ஸ் பெக்டர் பாரதி விசாரணை நடத்தி வருகின்றனர்.



விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்தின் சாலை மற்றும் சுற்றுசுவர் உடைந்தும் குண்டும் குழியுமாக படு மோசமான நிலையில் உள்ளதால் சீரமைக்க பொதுமக்கள் கலெக்டரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் நடைபெற்ற தேசிய சிறுபான்மையினர் உரிமைகள் தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம் , முன்னாள் மத்திய நிதித்துறை இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் , சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்) ஆகியோர் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஆர்.ஸ்ரீதர் உடன் உள்ளனர்.

# விழுப்புரத்தில் தொழில் கடன் விழிப்புணர்வு முகாம் !

## மாவட்ட தொழில் மையம், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடந்தது!!

விழுப்புரம்,டிச.20

விழுப்புரத்தில் நடந்த முகாமிற்கு, மாவட்ட தொழில்மைய பொது மேலாளர் அருள் தலைமை தாங்கினார். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் மாவட்ட தலைவர் அம்மன்கருணாநிதி முன்னிலை வகித்தார். முகாமில், வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய அரசு துறைகள் தரும் கடன் வகைகள், கடன் மற்றும் மானிய திட்டங்கள், இவற்றை பெறும் வழிமுறைகள் குறித்து விளக்கப்பட்டது. மேலும், இந்த முகாமில் பங்கேற்ற தொழில் முனைவோர், வணிகர், இளைஞர்கள், மகளிர்கள், திறன் மேம்பாடு, தகுதி, வாய்ப்புள்ள தொழில், வணிக திட்டங்களை கண்டறிதல், திட்ட அறிக்கை தயாரித்தல், தொழில் மற்றும் வணிக நிறுவனங்களை நிறுவுதல், நிர்வகித்தல், நிதி நிறுவனங்களுடன் தொடர்பில் இருத்தல், சந்தைப்படுத்துதல், ஏற்றுமதி ஆகிய தொழில் மற்றும் வணிகம் தொடர்பான முறையான தகவலும், தெளிவும் பெற்றனர். பின், கடன் கோரி விண்ணப்பங்களை பதியவும், பரிசீலிக்கவும் வழிவகை செய்தனர்.



நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலக வளாகத்திலுள்ள மின்னணு வாக்குப்பதிவு சேமிப்பு கிடங்கில், வாக்குபதிவு இயந்திரங்களை பெங்களூர் பெல் நிறுவன பொறியாளர்கள் மூலம் நடைபெறும் முதல் நிலை சரிபார்க்கும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டார்.

# குழந்தைகள் நலன் சார்ந்து பணியில் ஈடுபடும் மருத்துவர்கள் மற்றும் காவல் துறையினருக்கான திறன் வளர்ப்பு பயிற்சி!

## ஆட்சித்தலைவர் இரா.பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது!!





சேலம்,டிச.20

சேலம் மாவட்ட ஆட்சியரக கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி., தலைமையில், தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர் புதுக்கோட்டைவிஜயா முன்னிலையில், குழந்தைகள் நலன் சார்ந்து பணியில் ஈடுபடும் மருத்துவர்கள் மற்றும் காவல் துறையினருக்கான திறன் வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது.

தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையமானது குழந்தைகள் உரிமை மீறல்களை தடுத்து பாதுகாப்பதிலும், வழக்குகளை விசாரிப்பதற்கும் உரிமையியல் நீதிமன்றத்திற்கு இணையான அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

மேலும், காவல் துறை, நீதிமன்றம் மற்றும் பிற அலுவலகங்களிலிருந்து உரிய ஆவணங்களைக் கோரிப் பெறப்பட்டு, குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் உரிமைகள் மீறல்கள் தொடர்பான குற்றங்களை துரிதமாக விசாரிக்க குழந்தைகள் நீதிமன்றங்கள் அமைத்து கண்காணிக்கப்படுகிறது.

உரிமை மீறல்கள் காரணமாக பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு உரிய நிவாரணம் மற்றும் உரிய மறுவாழ்வு நடவடிக்கை குறித்து அரசுக்கு அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்வது உள்ளிட்ட அதிகாரங்களைக் கொண்டு இவ்வாணையம் செயல்படுகிறது.

இன்றையதினம் நடைபெறும் இப்பயிற்சியில் அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர்கள், குழந்தை நல காவல் அலுவலர்கள், சிறப்பு சிறார் காவல் உதவிப்பிரிவு, ஆட்கடத்தல் தடுப்பு பிரிவு, மகப்பேறு மருத்துவர்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவர்கள் ஆகியோருக்கு பாலியல் ரீதியான துன்புறுத்தலால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை குழந்தை நேய முறையில் அணுகுதல் குறித்த பயிற்சி வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர்கள் முனைவர்.மோ.கசீர்ராஜ் மற்றும் உறுப்பினர் மருத்துவர் மோனா மட்டில்டா பாஸ்கர், குழந்தை மற்றும் இளம்பருவ மனநல மருத்துவம் துறை அலுவலர் டாக்டர்.சத்யராஜ், சட்ட மருத்துவ மற்றும் நச்சியியல் இணைப் பேராசிரியர் டாக்டர். லத்திப் ஆர். ஜான்சன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ச.சந்தியா, சேலம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலக சட்டம் சார்ந்த நன்னடத்தை அலுவலர் சா.ராஜ்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் உபகோவிலான நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த பழநி கோதைமங்கலம் பெரியவுடையார் கோவில் மார்கழி மாத முதல் பிரதோஷ வழிபாட்டில் பெரியவுடையார் மற்றும் நந்தீஸ்வரர் சாமிகளுக்கு சிறப்பு பூஜைகள் ஆராதனைகள் செல்வம் குருக்களால் சிறப்பாக நடைபெற்றது. நூற்றுக்கணக்கான மக்கள் பிரதோஷ வழிபாட்டில் கலந்து கொண்டனர்



# வன உரிமைச் சட்டத்தை அமல்படுத்த கோரி தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம் சார்பில் காத்திருப்பு போராட்டம்!

திருப்பத்தூர் டிச.20

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் நகராட்சி அரசினர் தோட்டம் பகுதியில் உள்ள சப் கலெக்டர் அலுவலகம் எதிரில் தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம் மற்றும் ஜவ்வாது மலைவாழ் மக்கள் சங்கம் சார்பில் மாநிலம் தழுவிய காத்திருப்பு போராட்டம் மாவட்ட செயலாளர் ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது. இந்த போராட்டத்தை ஜவ்வாது மலைவாழ் மக்கள் சங்கத்தின் கமிட்டி தலைவர் லோகநாதன் துவக்கி வைத்தார். இதில் மாநில பொருளாளர் சண்முகம் கலந்து கொண்டு கண்டன உரை ஆற்றினர். இந்த காத்திருப்பு போராட்டத்தில் வன உரிமைச் சட்டம் 2005யை முழுமையாக அமல்படுத்தி வன நிலம் அளவீடு செய்து பட்டா வழங்க வேண்டும். நடுக்குப்பம் முதல் விளாங்குப்பம் வரை உள்ள மண் சாலையை தார் சாலையாக அமைக்க வேண்டும், மலைவாழ் மக்களுக்கு அரசு தொகுப்பு வீடு 10 லட்சம் ரூபாய் ஆக உயர்த்த வேண்டும், மலைகளில் ஆடு மாடு மேய்ப்பதற்கு அபராதம் விதிக்கும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், நீண்ட காலமாக அனுபவத்தில் உள்ள நிலங்களுக்கு பட்டா வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டது. இந்தப் போராட்டத்தில் சிபிஎம் கட்சி தாலுக்கா செயலாளர் காமராஜ், சிஐடியூ ஒருங்கிணைப்பாளர் கேசவன், தமிழ்நாடு விவசாய சங்க தாலுகா செயலாளர் ஆனந்தன், தலைவர் சிங்காரம், மற்றும் தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம் மற்றும் ஜவ்வாது மலைவாழ் மக்கள் சங்கத்தின் நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# கமுதியில் கையில் கஞ்சி கலயம் காதில் பூ சுற்றி விவசாயிகள் போராட்டம்!

கமுதி, டிச20

ராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் தமிழ்நாடு வைகை விவசாயிகள் சங்கம் சார்பாக காத்திருப்போர் போராட்டத்தில் கையில் கஞ்சி கலயம் ஏந்தியும் காதிலே பூசுன்றியும் மூன்றாம் அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி விவசாயிகள் தாலுகா அலுவலகம் முன்பு காத்திருப்பு போராட்டத்தை நடத்தினார்கள். டத்திற்கு சேந்தமங்களம் விவசாயி மோகன்தாஸ் தலைமை வகித்தார். செல்வேந்திரன் முன்னிலை வகித்தார்.மாவட்ட தலைவர் கோவிந்தன் அனைவரையும் வரவேற்றார். விவசாயிகள் போராட்டத்தில் கவுரவ தலைவர் மிக்கேல் / மாவட்ட செயலாளர் மரகத வேல் உள்பட திறனானோர் கலந்துகொண்டனர். முடிவில் மு.கணபதி நள்ளி கூறினார்.

# பழனி - கொடைக்கானல் ரோப் கார் திட்டத்தை செயல்படுத்த கோரி தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநில தலைவர் விக்கிரம ராஜா பேச்சு!



பழனி டிச.20

பழனியில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு பழனி மாவட்டத்தின் 5ஆம் ஆண்டு பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இதற்கு மாவட்டத் தலைவர் ஜே பி சரவணன் தலைமை வகித்தார். மாநில இணைச்செயலாளர் சரவண பொய்கை கந்தவிலாஸ் அதிபர் மற்றும் வேல்ஸ் கோட் ஹோட்டல் உரிமையாளர் என் பாஸ்கரன், மாநில துணைத்தலைவர் கண்பத் கிரேண்ட் அதிபர் என் ஹரிஹரமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் மாநில வணிகர் சங்க பேரமைப்பு தலைவர் விக்கிரமராஜா பேசியதாவது:

பழனிடு கொடைக்கானல் ரோப்கார் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும். பழனி தாராபுரம் சாலையில் மேம்பாலத்தை விரைவாக தொடங்கி கட்ட வேண்டும். பழனிக்கு பகல் நேர சென்னை ரயில்களை இயக்க வேண்டும். பழனி அடிவாரம் வியாபாரிகளின் நலனுக்காக, பழனி அறங்காவலர் குழுவில் வணிகர் சங்க பிரதிநிதி இடம்பெற வேண்டும். இது பற்றி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழகத்தில் கார்பரேட் நிறுவனங்களின் அச்சுறுத்தல் அதிகமாக இருக்கிறது. ஆன்லைன் வணிகத்தால் 35 சதவீத வணிகம் கைவிட்டு போயிருக்கிறது. மும்பையைச்சேர்ந்த வியாபாரிகள் இங்கு பெரும் நிறுவனங்களை தொடங்கி சாமானியர்களை அப்புறப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே தமிழக முதலமைச்சர். வணிகர்களுக்கான சிறப்பு பாதுகாப்பு சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். கார்ப்பரேட் நிறுவனங்கள் கடை நடத்த அனுமதிக்க கூடாது. வணிகர்களின் பிரச்சினைகளை தீர்க்க தனித்துறை அமைத்தால் எதுவாக இருக்கும். தமிழகத்தில் தேர்தல் அறிவித்தவுடன் எங்கள் கோரிக்கைகள் அடங்கிய பட்டியல் அனைத்து கட்சிகளுக்கும் வழங்கப்படும். எந்த எந்தக் கட்சி முன் வந்து எழுத்து பூர்வமாக எழுதி தருகிறார்களோ அதை ஆய்வு செய்து எங்கள் வாக்குகளை நகர்த்துவோம். இவ்வாறு அவர் கூறினார். நிகழ்ச்சியில் பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ பிசெந்தில்குமார், மண்டலதலைவர் திண்டுக்கல் டி கிருபாகரன் மாநில பொது செயலாளர் கோவிந்தராஜுலு, மாநில பொருளாளர் ஏ எம் சதக்கத்துல்லா, பழனி நகர திமுக செயலாளர் வேலுமணி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அஸ்வின் பிரபாகரன், ஆனந்த விலாஸ் விபூதி ஸ்டோர் முனியாண்டி, மாவட்ட கௌரவதலைவர் கண்ணுசாமி, மாவட்ட செயலாளர் என் செந்தில்குமார், எஸ் ஜெகதீஷ், ரம்யா கிருஷ்ணன், பி ராதாகிருஷ்ணன், ஏ பழனிச்சாமி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பி சம்பத், பிகே ஈஸ்வரமூர்த்தி, சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் எம் மணிக்கண்ணன், என் ஆறுமுகம், நகர் மன்ற துணைத் தலைவர் கந்தசாமி, நெசவாளர் அணி பாஸ்கரன், ஒர்க் ஷாப் பாலசுப்பிரமணி, ஆகியோர் உட்பட ஏராளமானவர் கலந்து கொண்டனர்



15 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி நாகப்பட்டினம் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அனைத்து ஓய்வூதியர்கள் சங்கம் சார்பில் கலெக்டர் அலுவலகம் முன்பு மாவட்ட தலைவர் கிருஷ்ணசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் மாவட்ட பொருளாளர் குமரன், செயலாளர் மனோகரன், மாவட்ட துணைத்தலைவர் பட்டாபிராமன், மாநில செயற்குழு உறுப்பினர் மாரிமுத்து கலந்து கொண்டனர்.

# பையனூர் ஸ்கூல் ஆப் அலைடு ஹல்த் சயின்ஸ் கல்லூரியின் சார்பில் கூடுவாஞ்சேரியில் தேசிய மாசு கட்டுப்பாட்டு தின விழிப்புணர்வு பேரணி!



செங்கல்பட்டு, டிச.20

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் அடுத்த விநாயக மிஷினின் பையனூரில் அமைந்துள்ள அலைடு ஹல்த் சயின்ஸ் கல்லூரியில் தேசிய மாசு கட்டுப்பாட்டு தின விழிப்புணர்வு பேரணி பல்கலைக்கழக வேந்தர் மரு. எ.எஸ். கணேசன் அறிவுறுத்தலின் படி இந்நிகழ்ச்சி கல்லூரியின் டீன் பேராசிரியர் மரு.பி. செந்தில்குமார் வழிகாட்டுதலின்படி கல்லூரியின் பொறுப்பு இயக்குனர் முத்துராஜ் சிறப்பு விருந்தினர்களை வரவேற்றார்.

வித்யாபதி, வனச்சரக அதிகாரி, செங்கல்பட்டு வனச்சரகம், தமிழ்நாடு வனத்துறை நெடுமாறன், காவல் ஆய்வாளர் மற்றும் ஜாகிர் உசேன் காவல் உதவி ஆய்வாளர், கூடுவாஞ்சேரி காவல் நிலையம், பரஞ்சோதி, இயக்குனர், இனாட்டா பவுன்டேஷன் ஆகியோர் கலந்து கொண்டு கொடி அசைத்து தேசிய மாசு கட்டுப்பாட்டு தின விழிப்புணர்வு பேரணியை துவக்கிவைத்தார்கள். இப்பேரணி கூடுவாஞ்சேரி அரசு மருத்துவமனை தொடங்கி மாநகரப் பேருந்து நிலையம் வழியாக கூடுவாஞ்சேரி சிக்னல் வரை நடைபெற்றது.

இதில் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு சிறு குறு நாடகங்களை நடத்தியும் பிரசுரங்களை வழங்கியும் விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தினர். பேரணியின் இறுதியில் அனைவரும் உறுதிமொழி ஏற்று கொண்டார்கள்.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஒருங்கிணைப்பாளர்கள் தீபிகா சந்தோஷ், பூர்ணிமா பத்மா ஆகியோர் சிறப்பாக செய்து இருந்தனர்.

# உதகையில் திரு இருதய ஆண்டவர் பேராலயத்தில் கடும் குளிரிலும் பூபால குழுவினர் வீடு வீடாக சென்று கிறிஸ்து பிறப்பு பாடல் பாடி கொண்ட்டாட்ம்!



ஊட்டி,டிச.20

கிறிஸ்த்தவர்களின் முக்கிய பண்டிகைகளில் மிக முக்கிய பண்டிகை கிறிஸ்த்துமஸ். ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் 25ம் தேதி உலகம் முழுவதும் கிறிஸ்த்து பிறப்பை வெகுவாக மக்கள் கொண்டாடுவது வழக்கம். இந்நிலையில் உலகை மீட்க வந்த ரட்சகர் இயேசு கிறுஸ்து பிறக்கபோகிறார் என்ற மகிழ்ச்சியான நற்செய்தியை 4ம் நூற்றாண்டில் குளிர் காலத்தில் அண்டை வீடுகளுக்கு சென்று பாடல் குழுவினர் எடுத்துரைத்தனர். அதன் அடிப்படையில் உண்டான பூபால பாடல் நிகழ்ச்சி இந்தியா உட்ப்பட பல நாடுகளில் இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு கட்டமாக உதகையில் உள்ள நூற்றாண்டு பழமை வாய்ந்த திரு இருதய ஆண்டவர் பேராலயத்தில் பூபால பாடல் நிகழ்ச்சி கடந்த 1ம் தேதி துவங்கியது. உதகை மறை மாவட்ட ஆயர் அமல்ராஜ் அனுமதியின் பெயரில் பங்குத்தந்தை ரவி லாரன்ஸ், உதவி பங்குதந்தை ஜெய்சன் ஆகியோர் தலைமையில் இந்த பூபால பாடல் நிகழ்ச்சி நடைப்பெற்று வருகிறது. குறிப்பாக உதகை திரு இருதய ஆண்டவர் பேராலயம் சுமார் 800கும் அதிகமான குடும்பங்களை கொண்டுள்ளது. இந்த கத்தோலிக்க குடும்பங்கள் உள்ள பகுதிகளுக்கு இரவு நேரங்ளில் பங்கு இளைஞர்கள் 25 பேர் கிறிஸ்த்து பிறப்பு பற்றி ஹார்மோனியம், மத்தளம், உள்ளிட்ட இசை கருவிகளால் இசை மீட்டு பாடல் பாடி உற்சாகமாக கிறிஸ்து பிறப்பு நற்செய்தியை அறிவித்து வருகின்றர். மாலை 6:30 மணிக்கு துவங்கும் பூபால பாட ல் நிகழ்ச்சி இரவு 11:30 மணி வரை நடைப்பெறுகிறது. கடும் குளிரையும் பொருட்ப்படுத்தாமல் கையில் குழந்தை இயேசு சுருபத்தை எடுத்துக்கொண்டு வீடுகளில் வைத்து சிறய ஜெபம் சொல்ப்பட்டு கிறிஸ்மஸ் வாழ்த்து கூறி வருகின்றனர். மேலும் கிறிஸ்துமஸ் தாத்தா வேடம் அணிந்து இனிப்புகளை வழங்கியும் வாழ்த்தும் கூறி வருகின்றனர். இந்த பூபால பாடல் நிகழ்ச்சி 21ம் தேதி வரை நடைப்பெறுகிறது.

# ஐ.என்.டி.யு.சி திண்டுக்கல் மேற்கு மாவட்ட தலைவர் ஒடவை ஆர்.பிச்சைமுத்து காங்கிரஸ் கட்சி சார்பில் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட விருப்ப மனு தாக்கல்!

ஒட்டன்சத்திரம் டிச.20

ஐ.என்.டி.யு.சி திண்டுக்கல் மேற்கு மாவட்ட தொழிற்சங்க காங்கிரஸ் சார்பாக மாவட்ட தலைவர் ஒடவை ஆர்.பிச்சைமுத்து தாராபுரம், அவினாசி மற்றும் வால்பாறை தொகுதிகளில் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட விருப்ப மனு அளித்துள்ளார்.



தமிழ்நாட்டில் நடைபெற உள்ள 2026 சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட விருப்பம் தெரிவித்து ஐ.என்.டி.யு.சி திண்டுக்கல் மேற்கு மாவட்ட தொழிற்சங்க காங்கிரஸ் சார்பாக சென்னை சத்திய மூர்த்தி பவனில் மாவட்ட தொழிற்சங்க காங்கிரஸ் மேற்கு மாவட்ட தலைவர் ஒடவை ஆர்.பிச்சைமுத்து தாராபுரம், அவினாசி மற்றும் வால்பாறை ஆகிய தொகுதிகளில் போட்டியிட விருப்ப மனு அளித்துள்ளார்.

முன்னாள் துணை சேர்மனும் பி.சி.சி கமிட்டியின் பாலகிருஷ்ணசாமி விருது நகர் தொகுதியில் போட்டியிட விருப்ப மனு அளித்துள்ளார். இந்நிகழ்ச்சியில் மாநில செயல் தலைவர் என்.கே. அருள்ஜோதி, திண்டுக்கல் மேற்கு மாவட்ட ஐ.என்.டி.யு.சி பொருப்பாளர் மகுடீஸ்வரன் மற்றும் பி.சின்னராஜ், டி.சம்பத் ஆகியோர் உடன் இருந்தனர்.

விரைவில் மேற்கு மண்டலத்தில் தொழிலாளர் பிரச்சினைகளை கலந்து ஆலோசனை செய்யது தீர்வு காண மாநில பொதுச்செயலாளர் கே.கே. களஞ்சியம் வருகை தர உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## அரூர் அருகே சிட்லிங் வனப்பகுதியில்
# சாலை அமைக்க கோரி பொதுமக்கள் மறியல்; போக்குவரத்து பாதிப்பு!

அரூர் டிச.20

தர்மபுரி மாவட்டம் அரூர் அருகே உள்ள சிட்லிங் பஞ்சாயத்து மலை மக்கள், கோட்டப்பட்டி–சிட்லிங் சாலை சீரமைப்பை கோரி இன்றும் மறியல் நடத்தி வருகின்றனர்.

பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்தும் அரசு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்பதில் மக்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

சுமார் 24 பழங்குடி கிராமங்கள் அடங்கிய இந்த பஞ்சாயத்தில் 15,000க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் வசிக்கின்றனர். கோட்டப்பட்டி–சிட்லிங் சாலை கடந்த பல ஆண்டுகளாக பராமரிப்பு இன்றி சேதமடைந்ததால், போக்குவரத்து முற்றிலும் தடுமாறியுள்ளது.

மழைக்குப் பிறகு சாலையில் உருவான மிகப்பெரிய பள்ளங்களால் கர்ப்பிணிகள், முதியவர்கள், மாணவர்கள், நோயாளிகள் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சாலை சேதமடைந்ததால் மருத்துவம், கல்வி, வேலைவாய்ப்பு போன்ற அடிப்படை தேவைகள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் குற்றம்சாட்டினர். மூன்று ஆண்டுகளாக கோரிக்கை – அரசின் மெத்தனப் போக்கு தொடர்கிறது மக்கள் கூறியதாவது:

“சாலை சீரமைக்க பலமுறை மனுக்கள் கொடுத்தாலும், அரசு மற்றும் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பழங்குடியினர்கள் என்ற பெயரில் நாங்கள் வாக்குகளுக்குப் பிறகு மறக்கப்பட்டவர்கள் போல வாழ்கிறோம். “மலைப்பகுதி மக்களின் பிரச்சனையை அரசும், மாவட்ட நிர்வாகமும் தொடர்ந்து புறக்கணிக்கிறது. சாலை போன்ற அடிப்படை வசதியும் வழங்காதது அரசு அலட்சியத்தின் உச்சம். ”வனத்துறை, வருவாய்த்துறை ஒருவரை ஒருவர் குற்றம் சட்டும் நிலை வனப்பகுதி வழியாகச் செல்லும் இந்த சாலை திருவண்ணாமலை–சேலம் பிரதான சாலையுடன் இணைக்கப்படுகிறது. கனரக வாகனப் போக்குவரத்தால் சாலை மேலும் சேதமடைந்துள்ளது. “மலைவாழ் மக்களின் சாலை பிரச்சனையை அரசு உடனடியாக தீர்க்க வேண்டும்; இல்லையெனில் தொடர்போராட்டங்கள் ஏற்படும்” என்று மக்கள் எச்சரித்தனர்.



# உதயேந்திரம் பேரூர் சி.வி.பட்டரை பாகம் 147 வாக்குச் சாவடி தெரு முனை பரப்புரைக் கூட்டம்!

வாணியம்பாடி டிச.20

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி, உதயேந்திரம் பேரூர், சி.வி. பட்டரை பூத் எண் 146ல், என் வாக்குச் சாவடி, வெற்றி வாக்குச்சாவடி பரப்புரையில், தீவிர தேர்தல் களப்பணிகள் குறித்தும், புதிய வாக்காளர்களை சேர்ப்பது குறித்தும், கழக அரசின் சாதனைகளை, பொதுமக்களிடம் எடுத்துக்கூறும் நிகழ்ச்சி, உதயேந்திரம் பேரூர் கழக செயலாளர் ஆ. செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. அவைத்தலைவர் சி.குமார், மாவட்ட ஆதி திராவிட நலக்குழு துணை அமைப்பாளர் கோ.வி.அசோகன், தென்றல் தமிழரசன், பேரூராட்சிதுணைத்தலைவர்வி.கோவிந்தராஜ், கிளைக் கழக செயலாளர் பி சுகுமார், பொன்னுசாமி, சாமுடி, சின்னத்தாய்,கார்த்திக், பிரசாத், கோகுல்ராஜ், ஆகாஷ், பத்திரி, பாலன், ஜான், அரசு டைலர் முருகன், உதாகங்கர்பு, அம்பலவாணன் எம்.சி. மாவட்ட பிரதிநிதிகள் மேகநாதன், இளைஞர் அணி பி சிலம்பரசன், ஏ அருண், எஸ் வினோத்குமார், மாவட்ட துணை அமைப்பாளர் பி.குமரேசன், பேரூர் கழக நிர்வாகிகள் மீர் முகமது கனி, பி.செந்தில், ஏ ஜோசப்தாஸ், விசிகுமார் ஏ ரமேஷ் ஏ இசை இ.இளங்கோ ஜி சௌந்தர் போட்டோ சி எஸ் பாபு எம் ஆனந்தன் கிளைக் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர் . பி எல் ஏ டு பி ஜெகநாதன் ரங்கநாதன் பி டி ஏ மணிகண்டன் மற்றும் பி எல் சி நன்றி கூறினார்.

# தூத்துக்குடி மாநகராட்சி கட்டிடத்தில் மேயர் ஆணையர் திடீர் ஆய்வு!

தூத்துக்குடி டிச.20

தூத்துக்குடி பழைய மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலகத்தில் பொதுமக்கள் குறை தீர்க்கும் முகாம் நடைபெற்றது. முகா முடிவடைந்த பின்பு திடீரென்று அங்கிருந்து மாநகராட்சி மேயர் ஜெகன் பொியசாமி, ஆணையர் ப்ரிய்ங்கா ஆகியோர் இரண்டு மாடி ஏறி மொட்டை மாடிக்கு சென்றனர்.

மேயரும் ஆணையரும் மழையின்போது குடை பிடித்துக்கொண்டு மொட்டை மாடிக்கு சென்றதையடுத்து அதிகாரிகளும் பணியாளர்களும் உடனடியாக பின் தொடர்ந்து ஓடினார்கள். மொட்டை மாடிக்கு ஏறியவுடன் அதனை பார்வையிட்ட மேயர் ஜெகன் பொியசாமி மொட்டை மாடி ஒரு பகுதியில் சிறிய அளவில் ஒரு மரம் வளர்ந்துள்ளது உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் இதனை ஏன் அப்புறப்படுத்தாமல் வைத்திருந்தீர்கள் என்று அங்கு இருந்த அதிகாரிகள் பணியாளர்களிடம் கூறினா்.

மேலும் மொட்டை மாடியில் சில இடங்களில் மழைநீர் தேங்கி கீழே தண்ணீர் இறங்குவதை கண்டறிந்து உடனடியாக அதனை சரி செய்ய வேண்டும் எந்தெந்த பகுதிகளில் மழை நீர் லீக்கேஜ் உள்ளதோ அந்தப் பகுதிகளை முழுமையாக சரி செய்ய வேண்டும் என்று அதிகாரிகளுக்கு மேயர் ஜெகன் பொியசாமி, ஆணையர் ப்ரியங்கா உத்தரவிட்டனர்.

அதிகாரிகள் பணியாளர்கள் மத்தியில் மேயர் ஜெகன் பொியசாமி பேசுகையில் மாநகராட்சி அலுவலகங்கள் கட்டிடங்கள் முழுமையாக 100% பாதுகாக்க வேண்டும் அது அந்தந்த பகுதி அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் பணியாளர்களின் கடமையாகும் இதனை நீங்கள் சரி செய்ய வேண்டும் திடீரென்று மீண்டும் நான் மொட்டை மாடிக்கு வந்து பார்வையிட வருவேன் அப்போது சுத்தமாகவும் குறைகளை சரி செய்து இருக்க வேண்டும் என்று கூறினார்.

# தூத்துக்குடி தொகுதியில் போட்டியிட சி.த.செல்லப்பாண்டியன் விருப்பமனு!

தூத்துக்குடி டிச.20

தூத்துக்குடி தமிழகத்தில் 2026ல் நடைபெறவுள்ள சட்டமன்ற தோ்தலில் 234 தொகுதிகளிலும் போட்டியிடுவதற்கு அதிமுக வினா் சென்னை ராயப்பேட்டையில் உள்ளதலைமை அலுவலகமான எம்.ஜி.ஆர் மாளிகையில் விருப்பமனுக்கள் வழங்கலாம் என்று அதிமுக பொதுச்செயலாளரும் முன்னாள் முதலமைச்சருமான எதிா்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிச்சாமி அறிவித்திருந்தாா். அதன்படி கடந்த 15ம் தேதி முதல் விருப்பமனுக்கள் வழங்கி வருகின்றனா்.

இந்நிலையில் அதிமுக மாநில வா்த்தக அணி செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சி.த.செல்லப்பாண்டியன் எம்.ஜி.ஆர் மாளிகையில் உள்ள நிர்வாகிகளிடம் தூத்துக்குடி தொகுதியில் போட்டியிட விருப்பமனு வழங்கியது மட்டுமின்றி அதிமுக பொதுச்செயலாளரும் முன்னாள் முதலமைச்சருமான எதிா்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிச்சாமி எடப்பாடி தொகுதியில் போட்டியிட வேண்டும் என்று இரண்டு விருப்பமனுவை வழங்கினாா்.

# திருவெண்ணெய்நல்லூர் கிளை நூலகத்தில் புத்தகக் கண்காட்சி!

திருவெண்ணெய்நல்லூர், டிச.20

திருவெண்ணெய்நல்லூர் கிளை நூலகத்தில் புத்தகக் கண்காட்சி நடைபெற்றது. தமிழக அரசு 821 நூலகங்களுக்கு தொல்லியல் துறை நூல்கள் வழங்கி உள்ளது. அதன் ஒரு பகுதியாக திருவெண்ணெய்நல்லூர் கிளை நூலகத்தில் தொல்லியல் துறை நூல்கள் சார்ந்த



கண்காட்சி நடைபெற்றது. இப்புத்தகக் கண்காட்சிக்கு மாவட்ட நூலக அலுவலர் இளஞ்செழியன் தலைமை தாங்கினார். பேரூராட்சி மன்ற தலைவர் அஞ்சுகம்கணேசன் அவர்கள் குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்கள். பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் வாசகர்கள் படிப்பவர்கள் கலந்து கொண்டு புத்தகங்களை படித்தனர். இந்நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்ற தலைவர் அஞ்சுகம்கணேசன், மற்றும் துரைமனோகரன் தலா ரூ. 5000 செலுத்தி பெரும் புரவலராக தங்களை இணைத்துக் கொண்டனர். மேலும் ராஜாராமன், கௌரி, ரஹமத்நிஷாஷாஜகான், குமரகுருபரன் ஷேக்லத்திப் மற்றும் எழுத்தாளர் கோ.சுரேஷ் ஆகியோர் தலா ரூபாய் 1000 /வீதம் செலுத்தி புரவலராக தங்களை இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியின் இறுதியில் திருவெண்ணைநல்லூர் கிளை நூலகர் சசிகுமார் அவர்கள் அனைவருக்கும் பாராட்டி நன்றி கூறினார்

# சூதாடிய 6 பேர் கைது; பைக்,பணம் பறிமுதல்!



திருக்கோவிலூர் டிச.20

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் அடுத்த செட்டிதாங்கள் பகுதியில் காசு வைத்து சூதாடுவதாக ரகசிய தகவல் கிடைத்தது அதன் அடிப்படையில் திருக்கோவிலூர் போலீசார் அங்கு சென்று திருக்கோவிலூர் உதவி ஆய்வாளர் பிரபாவதி தலைமையிலான போலீசார் அங்கு சென்று சோதனை நடத்திய போது செந்தில் ராமதாஸ் மோகன் கொளஞ்சி சுரேஷ் விஜயகுமார் ஆகியோர்கள்காசு வைத்து சூதாடியது தெரியவந்தது அதனை தொடர்ந்து போலீசார்கள் அவர்களை பிடித்து கைது செய்து அவர்களிடம் இருந்த ரொக்க பணம் ரூபாய் 70ஆயிரத்து 340 பணத்தை கையகப்படுத்தி மேலும் அவர்களிடம் இருந்த மூன்று இருசக்கர வாகனத்தை பறிமுதல் செய்து நீதிமன்றத்தில் ஆறு பேரை ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.



விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூரில் உண்டு உறைவிட பள்ளியில் தாய் தந்தை இழந்து வாடும் பிள்ளைகளுக்கு விசிக நகர செயலாளர் வழக்கறிஞருமான வெ. மனோகரன் தலைமையில் பள்ளிப் பிள்ளைகளுக்கு பேனா பென்சில் நோட் பெட்ஜெட் ஆகியவை வழங்கப்பட்டது இதில் வி.சி.க. தொண்டர்கள் சரவணன் சிவகுரு பிரபுதேவா பிரேம்குமார் ஹரி சூர்யா பாக்கியராஜ் மற்றும்கட்சிநிர்வாகிகள்பொதுமக்கள்கலந்துகொண்டனர்.

# ஹெட்டிச் தென் இந்தியாவில் அனுபவ மையங்களை வலுப்படுத்தி, கோயம்புத்தூரில் பிரத்யேக கடையை தொடங்கி உள்ளது!



கோயம்புத்தூர் டிச.20

ஹெட்டிச் புதிய HeX ஸ்டோர் கோயம்புத்தூரில் திறக்கப்பட்டு, வாடிக்கையாளர்களுக்கு ஹெட்டிச் பிராண்டின் முன்னேற்றமான உள்துறை (interior) தீர்வுகளை நேரடியாக அனுபவிப்பதற்கான வாய்ப்பை வழங்குகிறது. வாடிக்கையாளர்கள் ஸ்டோரில் பொருட்கள் தொடங்கி, வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப சிறப்பம்சங்களை உணர்ந்து, தனிப்பட்ட அடிப்படையில் உள்துறை தீர்வுகளை தேர்வு செய்யலாம். இது ஹெட்ச் தென் இந்தியாவில் வாடிக்கையாளர்களுடன் இணைந்த அனுபவத்தை மேம்படுத்தும் ஒரு முக்கிய மையமாக உள்ளது. HeX ஸ்டோர் வாடிக்கையாளர்களுக்கு தயாரிப்புகளைப் பார்க்கும் இடமாக மட்டும், அவர்களின் வாழ்க்கை முறை மற்றும் வடிவமைப்பு தேவைகளை கருத்தில் கொண்டு சரியான தீர்வுகளை வழங்கும் இடமாக உருவாக்கப்பட்டுள்ளது. இது தொழில்நுட்ப, வசதி மற்றும் கலைநயத்துடன் சேர்க்கையை வழங்கி, வீட்டு மற்றும் அலுவலகங்களுக்கு சிறந்த தனித்துவமான இடங்களை உருவாக்க விரும்பும் அனைவருக்கும் முழுமையான வழிகாட்டுதலை வழங்குகிறது.

ஹெட்டிச் இந்தியா விற்பனை இயக்குனர் திரு. ராகுல் தாக்கர் தெரிவித்தது போல், கோயம்புத்தூர் பாரம்பரியம் மற்றும் உயர்தர அனுபவங்களை மதிக்கும் நகரமாகும். ஹெட்டிச் தனது ஜெர்மன் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட உள்துறை தீர்வுகள் மற்றும் பரிசு பெற்ற உபகரணங்களை வாடிக்கையாளர்கள் நேரடியாக அனுபவிக்க முடியும் என அவர் கூறினார். ஹெட்டிச் எக்ஸ்க்ளூசிவ் – ட்வின் ப்ரோ வென்சர்ஸ், எண் 36, 148, இ. வெங்கடசாமி சாலை, ஆர்.எஸ். புரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு – 641002, தொலைபேசி: 8870014611 என்ற முகவரியில் HeX கோயம்புத்தூர் மையத்திற்கு வருகை தரலாம்.



# திருப்பத்தூரில் தேசிய சிறுபான்மையினர் உரிமைகள் தின விழாவில் ரூ.22.51 கோடியில் நலத்திட்ட உதவிகள்! அமைச்சர் நாசர் வழங்கினார்!!

திருப்பத்தூரில் டிச.20

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் அருட்தந்தை சொ.ஜோ. அருண் சே.ச தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் பாதுகாப்பு உரிமைகள் நலத்திட்டங்கள் குறித்த திட்ட விளக்க உரை ஆற்றினார். தமிழக முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் இருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களில் 80 சதவீதம் கோரிக்கைகள் நிறைவேற்றி உள்ளதாக தெரிவித்தார்.தொடர்ந்து தலைமை உரையாற்றிய மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் நாசர் தெரிவித்ததாவது. இஸ்லாமியர்கள் ஹஜ் பயணம் செல்வதற்கு முன் தங்களை தூய்மைப்படுத்திக் கொள்ள இடம் வேண்டும் என்று கேட்டவுடன் விமான நிலையம் அருகாமையிலேயே ஒரு ஏக்கர் நிலத்தில் ஏறக்குறைய 39 கோடியே 20 லட்சம் மதிப்பீட்டில் கட்டுமான பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளார் தமிழக முதல்வர். சிறுபான்மையினர் மக்களுக்கு பாதுகாப்பு அரணாக தமிழக முதல்வர் செயல்பட்டு வருகிறார். உலகம் முழுவதிலும் கிறிஸ்துவ மதத்தை பரப்பும் போது இயேசு கிறிஸ்து தேர்ந்தெடுத்த 35 மொழிகளில் ஒன்பதாவது இடமாக தமிழ் மொழி இடம்பெற்று இருந்தது. அந்த அளவிற்கு தொன்மையான மொழி தமிழ் மொழி . வேற்றுமையில் ஒற்றுமையாக நாம் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மதத்திற்கு அப்பாற்பட்ட தமிழக முதல்வர் இதுவரை 3000 கோயில்களுக்கு குடமுழுக்கு செய்து வைத்துள்ளார். ஓதுவார்களை அரசு ஊழியர்களாக மாற்றி மாத சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. இந்துவாக கிறிஸ்தவராக அல்லது இஸ்லாமியர் என எந்த மதத்தவராக இருப்பினும் பாதுகாப்பு அரணாக தமிழக முதல்வர் செயல்பட்டு வருகிறார் என அமைச்சர் தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வரும் டிச.27 ம் தேதி, கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு வருகை தருவதை முன்னிட்டு, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்விற்கான பிரம்மாண்ட விழா மேடை அமைக்கும் பணிகள் வருவதை பார்வையிட்டார்.



## திருப்பத்தூர் மாவட்டத்தில்
# தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம் , ஜவ்வாது மலைவாழ் மக்கள் சங்கம் இணைந்து காத்திருப்பு போராட்டம்!

திருப்பத்தூர் டிச.20

திருப்பத்தூர் மாவட்டம்: திருப்பத்தூர் தீயணைப்பு நிலையம் அருகே அமைந்துள்ள திருப்பத்தூர் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு, ஜவ்வாது மலைவாழ் மக்களுக்கு வன உரிமைச் சட்டம் – 2006ன் படி பட்டா வழங்கக் கோரி, நூற்றுக்கும் மேற்பட்ட மலைவாழ் பழங்குடி மக்கள் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 2017ஆம் ஆண்டு, வன உரிமைச் சட்டத்தின் கீழ் 1,379 மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், இதுவரை 26 நபர்களுக்கு மட்டும் அனுபவப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மனுக்களுக்கு நில அளவீடு செய்து, தகுதியானவர்களுக்கு உடனடியாக பட்டா வழங்க வேண்டும் என போராட்டக்காரர்கள்வலியுறுத்துகின்றனர்.

இந்த காத்திருப்பு போராட்டத்தில், பல்வேறு முக்கிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.மேலும் வன உரிமைச்சட்டம் 2006 முழுமையாக அமல்படுத்தி, நில அளவீடு செய்து பட்டா வழங்க வேண்டும். நடுக்குப்பம் முதல் வெள்ளாங்குப்பம் வரை உள்ள மண் சாலையை தார்சாலையாக அமைத்துத் தர வேண்டும்.

மலைவாழ் பழங்குடி மக்களுக்கு வழங்கப்படும் அரசு தொகுப்பு வீட்டு நிதியை 10 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும். ஜவ்வாது மலைப் பகுதியில் காட்டில் மாடு, ஆடு மேய்ப்பதற்காக அபராதம் விதிப்பதை தடை செய்து, சமூக பாதுகாப்பு சட்டத்தை உறுதி செய்ய வேண்டும். தற்போது அனுபவத்தில் உள்ள நிலங்களுக்கு உடனடியாக அளவீடு செய்து, அனுபவப் பட்டா வழங்க வேண்டும். இந்த கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என, தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம் சார்பாக போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# தூத்துக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் அமைச்சர் கீதாஜீவன் திடீர் ஆய்வு!

தூத்துக்குடி டிச.20

தூத்துக்குடி வருவாய் வட்டாட்சியா் அலுவலகத்தில் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கீதாஜீவன் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது அவர் தாயுமானவர் திட்டம் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்து பொதுமக்களின் கோாிக்கை மனுக்கள் மீது விரைவாக நல்ல முறையில் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொண்டாா். ஆய்வின் போது வருவாய் வட்டாட்சியர் திருமணி ஸ்டாலின், வட்ட வழங்கல் அலுவலர் ஞானராஜ், சமூகபாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் முருகேஸ்வரி, மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், பகுதி செயலாளர் ரவீந்திரன், வட்டச்செயலாளர்கள் பாலகுரு



சாமி, செந்தில்குமார், மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் அன்பழகன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் மார்கின்ராபர்ட், வட்ட அவைத்தலைவர் ராஜ்மோகன், வட்டபொருளாளர் சந்திரசேகரன், வட்டப்பிரதிநிதிகள் பாஸ்கா், கார்த்திகேயன், நாராயணராஜ், சுப்பிரமணியன், துணைச்செயலாளர் தங்க குமார் மற்றும் மணி அல்பட் உள்பட பலா் உடனிருந்தனர்.